Reg. No. : ..........................................

**D 1558** **Q.P. Code : [07 DL 06]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

Second Year

Part III — Tamil

அற இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

1. பண்புடைமை பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை விளக்கி வரைக.

2. மானம், பெருமை குறித்துக் குறட்பாக்கள் கூறும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

3. நல்லினம் சேர்தல், கூடா நட்புப் பற்றிய நாலடியார் கருத்துக்களை விளக்கம் செய்க.

4. சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வியல் அறங்களைத் தொகுத்துரைக்க.

5. கல்வி பற்றி நீதிநெறி விளக்கம் கூறும் செய்திகளை மதிப்பிடுக.

6. கொலை மறுத்தல் பற்றிய சாந்தலிங்க சுவாமிகளின் சிந்தனைகளைத் தெளிவுறுத்துக.

7. 'நன்னெறி' கூறும் நல்வாழ்க்கைக்கான செய்திகளை நவில்க.

8. அறநூல்கள் அறம் கூறும் உத்திகளை விளக்கி வரைக.

———————

**Reg. No. : ....................................**

**D 1559** **Q.P. Code : [07 DL 07]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

Second Year

Part III — Tamil

சிற்றிலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் குறவஞ்சி இலக்கியம் பெறும் சிறப்புக்களை விளக்கியுரைக்க.

2. குற்றால மலையின் அமைப்பும் வனச்சிறப்பும் குற்றாலக் குறவஞ்சியில் எங்ஙனம் எடுத்துரைக்கப்படுகின்றன?

3. கலிங்கப் போர் நிகழ்வின் பின்னதான போர்க்களக் காட்சியினைச் செயங்கொண்டார் காட்டுவது எவ்வாறு?

4. நந்தி வர்மனின் சிறப்புக்களை நந்திக் கலம்பகம் வழிக் கட்டுரைக்க.

5. தமிழ் மொழி, இலக்கியம் குறித்ததான செய்திகளைத் தமிழ் விடு தூது நூல் எடுத்துரைக்கும் பான்மை காட்டுக.

6. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தின் இலக்கிய நலன்களை எடுத்துக்காட்டுக.

7. முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பள்ளியர் ஏசல் பகுதி உணர்த்தும் சமூக வாழ்வியல் செய்திகளைத் தெளிவுறுத்துக.

8. தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் வகைப்பாடும் கட்டமைப்பும் பற்றிக் கட்டுரைக்க.

———————

Reg. No. : ..............................

**D 1560** **Q.P. Code : [07 DL 08]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

Second Year

Part III — தமிழ்

இலக்கணம் — 2

(புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை — ஒழிபியல் நீங்கலாக)

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. எழுத்துக்களின் வகை, வடிவம், ஒலிப்புப் பற்றிக் காரிகை கூறும் செய்திகளைத் தருக.

2. அடி, தொடை இயைபுகளையும் வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

3. வெண்பாவில் இலக்கணம் கூறி, வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

4. கலிப்பாவின் உறுப்புகளையும், வகைகளையும் விளக்கம் செய்க.

5. வெட்சி, கரந்தைக்குரிய ஒழுக்கங்களைப் புறப்பொருள் வெண்பாமாலை வழி விவரிக்க.

6. காஞ்சித் திணை உணர்த்தும் புறவொழுக்கச் செய்திகளைப் புலப்படுத்திக் கட்டுரை வரைக.

7. உழிஞைத் திணைக்குரிய துறைகளைக் குறிப்பிட்டு அவை உணர்த்தும் அரசியல் செய்திகளை விளக்கம் செய்க.

8. புறப்பொருள் வெண்பா மாலையின் பாடாண்திணையில் குறித்த புறவொழுக்கச் செய்திகளைப் புலப்படுத்துக.

---

**Reg. No. : ..........................................**

**D 1561** **Q.P. Code : [07 DL 09]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

Second Year

Part III — Tamil

இலக்கியத் திறனாய்வு

Time : Three hours Maximum : 100 marks

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. இலக்கியத்திற்கு பிற கலைகளுக்கும் உள்ள உறவும் உறழ்வும் கூறுக.

2. 'இலக்கியம் உணர்ச்சியின் வெளிப்பாடு' எனும் கருத்தை ஆய்ந்துரைக்க.

3. இலக்கியப் படைப்பில் கற்பனை பெறும் இடம் குறித்து விவரிக்க.

4. காலந்தோறும் இலக்கியப் படைப்பில் அமைந்த வடிவ மாற்றங்களை விளக்கம் செய்க.

5. இலக்கியப் படைப்பில் எதுகை, மோனை, ஓசை பெறும் இடத்தினை விளக்குக.

6. இலக்கியத்தை உணர்தலும் நுகர்த்லும் எவ்வாறு?

7. தொல்காப்பியம் கூறும் பழந்தமிழ் இலக்கியத்திற்கான மரபுகளைத் தெளிவுறுத்துக.

8. இலக்கியங்களை ஆராய்வதற்கான முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

Reg. No. : ..........................................

**D 1562** **Q.P. Code : [07 DL 10]**

(For the candidates admitted from 2007 onwards)

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2013.

Second Year

Part III — Tamil

தமிழ் இலக்கிய வரலாறு

Time : Three hours Maximum : 100 marks

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

(5 × 20 = 100)

1. தமிழ்ச் சங்கங்கள் குறித்ததான அறிஞர்களின் கருந்துக்களை மதிப்பிட்டுரைக்க.

2. சங்க இலக்கியத்தின் சிறப்புக்களை விளக்கி வரைக.

3. தமிழில் நீதி இலக்கியங்கள் குறித்த அறிமுகம் தந்து அவற்றின் சிறப்புரைக்க.

4. தமிழ்க் காப்பியங்களின் வரலாறும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

5. தமிழ்ப் பக்தி இலக்கியங்களின் தொகுப்பும் சிறப்பும் உரைக்க.

6. தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியினை மதிப்பிடுக.

7. கிறித்துவ, இசுலாமியத் தமிழ்இலக்கிய வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

8. இக்கால இலக்கியத்தின் பல்வேறு பரிணாமங்களை விளக்கி வரைக.

---